# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 நவம்பர் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 30.11.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

<u>பொருள் : 1</u>

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி,கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) பள்ளமோர்குளம் கிராமத்தில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) அமைக்க ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு, உத்தேச மதிப்பீடு ரூ.217.95 லட்சத்திற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. இந்த மதிப்பீட்டிற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018 நாள்.12.11.2018–ன்படி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மேற்கூறிய உரஙகிடஙகில், திண்டுக்கல், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூாரி மூலமாக மண் பரிசோதனை செய்ததில், மண்ணின் பழுதாஙகும் திறன் (Safe Bearing Capacity of Soil) குறைவாக உள்ளதால், மண்ணின் தன்மைக்கு ஏற்ப, (Pile Foundation) அஸ்திவாரம் அமைத்து கழிவு நீர் சுத்தகரிப்பு கட்டிட அமைப்புகள் (Fecal Sludge Treatment Plant) கட்டுமாறு திண்டுகல், அண்ணா பல்கலைக்கழகத்தால் தொழில்நுட்ப ஆலோசனை அறிக்கை வழஙகப்பட்டுள்ளது. அதன்படி விபரமான திட்ட மதிப்பீடு (Detailed Project Report) ரூ.340.00 இலட்சத்திற்கு தயாா் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு, நகர்மன்ற ஒப்புதலும், மதிப்பீட்டிற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்பித்து ரூ.340.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறவும், ஏற்கனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால், IUDM 2018-19 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழஙகி ஒதுகீடு செய்யப்பட்ட தொகை ரூ.217.95 இலட்சத்திற்கும், கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.122.05 இலட்சத்தினையும் IUDM 2018-19 திட்டத்தின் கீழ் முழு மானியமாக கோரவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.1022/2018/இ1)**

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஏற்கனவே, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாா் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கும், கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.122.05 இலட்சத்தையும் IUDM 2018-19 திட்டத்தின் கீழ் முழு மானியமாக கோரலாம்.

<u>தீர்மானம் எண்.470</u> அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 2</u>

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண்.164/செ.ம.தொ/2018 நாள்.27.08.2018–ன்படி தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை மலர்–2018ல் இந்நகராட்சியின், வளர்ச்சித்திட்டஙகளை தினதந்தி நாளிதழில் விளம்பரம் வெளியிட்ட வகைக்கு கட்டணம்

ரூ.41,580/—க்கு பட்டியல் எண்.MDU1819-0018203 நாள்.16.10.2018—ன் படியானது இந்நகராட்சிக்கு 20.11.2018—ம் தேதி வரப்பெற்றுள்ளது மேற்படி பட்டியல் ரூ.41,580/— மட்டும் வழஙகுவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.425/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

தினதந்தி நாளிதழில் விளம்பர கட்டணம் ரூ.41,580/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.471** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

இந்நகராட்சியில் 2018—2019—ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் (SBM) திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management Scheme) திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.22866/2018/பி3 நாள்.23.08.2018—ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண் 18281/2017/DO2 நாள் 05.10.2018—ன் படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டு. மேற்காணும், திட்டப்பணிகளில் சிப்பம்—1,2,3 மற்றும் 4—ல் (Package I,II,III & IV) கண்டுள்ள பணிகளுக்கு 13.11.2018—ம் தேதிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங மூலம் 31.10.2018—ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.1,15,343/—க்கு பட்டியல் எண்.AAA/0842/18-19 நாள்.03.11.2018—ன்படியானது இந்நகராட்சிக்கு 26.11.2018—ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்படி பட்டியல் தொகை ரூ.1,15,343/— மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸிக்கு வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது. **(கோப்பு எண். 635/2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸி விளம்பர கட்டணம் ரூ.1,15,343/— யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.472** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண்.164/செ.ம.தொ/2018 நாள்.27.08.2018—ன்படி தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை மலர்—2018ல் இந்நகராட்சியின், வளர்ச்சித்திட்டஙகளை தினகரன் நாளிதழில் (Kal Publication(p) LTD) விளம்பரம் வெளியிட்ட வகைக்கு கட்டணம் ரூ.9,900/—க்கு பட்டியல் எண்.3300111964 நாள்.18.10.2018—ன் படியானது இந்நகராட்சிக்கு 22.11.2018—ம் தேதி வரப்பெற்றுள்ளது மேற்படி பட்டியல் ரூ.9,900/— மட்டும் வழஙகுவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.425/2017/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

தினகரன் நாளிதழில் (Kal Publication(p) LTD) விளம்பர கட்டணம் ரூ.9,900/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.473</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் **TN65 Q 9807** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை (1. கிளெச் வேலை, 2. ஆயில் சர்வீஸ் 3. பிரேக் ஒர்க்ஸ் 4. புதிய டோர் மாற்றுதல் 5. ஸ்டேரிங வேலை 6. பெயின்டிங 7. எலக்ட்ரிக்கல் வேலை 8. கியர் வேலைகள் மற்றும் இதர பழுதுகள் சரிசெய்வதற்கு சரிசெய்யும் பணி செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 2,49,500/—க்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 462 நாள் 15.11.2018—ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 23.11.2018—ம் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **விலையின் விகிதம்** |
|---|---|---|
| 1 | என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>பேராவூர்,<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.2,49,479/—<br>(CGST & SGST உட்பட) |
| 2 | ஸ்ரீ விக்ணேஷ் என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.2,70,366/—<br>(CGST & SGST உட்பட) |
| 3 | ஏ.ஆர். என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>B1 காவல் நிலையம் அருகில்<br>G.H. ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.2,84,366/—<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண்.1129/2018/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் **TN65 Q 9807** –ல் பழுது நீக்கம் செய்து தருவதற்கு மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட ரூ 2,49,479/—க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பேராவூர், இராமநாதபுரம் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.474</u>** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு டிப்பர் லாரி வாகனம் **TN65 F 5067** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் 1. வண்டி முன்பக்க டோர் வேலை, 2. வண்டி பின்பக்க பாடி வேலை 3. கிளெச் வேலை 4. பிரேக் 5. ஹைட்ராலிக் வேலை 6. பெயின்டிங 7. ஆக்ஸிலேட்டர் வேலை 8. செல்ப்மோட்டார் வேலைகள் 9. புதிய பேட்டரி 10. கியர்பாக்ஸ் வேலை மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு ஓட்டுநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் வாகனத்தை பழுது நீக்கம் செய்து இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,90,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின் அவசரம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. உத்தேச செலவீனம் ரூ.2,90,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று டிப்பர் லாரி வாகனம் **TN65 F 5067** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் பழுதுநீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.475** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பொதுசுகாதாரப் பிரிவு இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. வார்டு ஆபிஸ் (1) புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள நகராட்சி கட்டிடத்திலும், (2) வடக்குத்தெரு கொந்தகருணை அப்பா தர்ஹா மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைந்துள்ள பகுதியிலும் தினசரி துப்புரவு பணியாளர்களை வருகைப் பதிவேட்டின்படி சரிபார்த்து, வார்டு வாரியாக பொதுசுகாதாரப் பணி செய்வதற்கு அனுப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இரண்டு பொதுசுகாதாரப் பிரிவு வார்டு ஆபிஸிற்கு தேவையான டேபிள் மற்றும் சேர்கள் மற்றும் நகராட்சி அலுவலக கணினி பயன்பாட்டிற்கும், எச்1 பிரிவு இருக்கை எழுத்தருக்கும் டேபிள், சேர், பீரோ மற்றும் கணினி மேஜை தேவையாக உள்ளதால் அவற்றை இராமநாதபுரம் கிழக்கு சர்வோதயா சங்கம் கதர்பவன் நிறுவனத்திலிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.1,20,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின்அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.
**(கோப்பு எண். 1213/2018/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு அலுவலகத்திற்கு தேவையான தளவாடப்பொருட்கள் இராமநாதபுரம் கிழக்கு சர்வோதய சங்கம் கதர்பவன் மூலம் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. உத்தேச செலவினம் ரூ. 1,20,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.476** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 8**

கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் குழல் விளக்குகள்—135 ஹைமாஸ் விளக்குகள்—9, சோடியம் விளக்குகள்—160, CEL விளக்குகள்—712, LED 25w-245 ஆக மொத்தம் 1261 எண்ணம் தெரு விளக்குகள் உள்ளன மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் திட்ட மின்மோட்டர்கள் மற்றும் 3 எண்ணம் கழிவு நீரேற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு இந்நகராட்சிக்கு ஒரு மின் பணியாளர் மற்றும் ஒரு மின்பணி உதவியாளர் பணியிடஙகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு தெரு விளக்குகள், குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டார்களை நல்ல முறையில் பராமரிப்பு மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்ற தீர்மான எண்.268 நாள்.30.11.2017—ன்படி ரூ.1,50,000/—க்கு அனுமதி பெற்று 29.12.2017—ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் மதிப்பீட்டுத் தொகைக்கு 0.26% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி—2 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண்.285, நாள்.29.12.2017—ன்படி ஒரு நபரைக் கொண்டு ஓராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்வதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 1300—1/2017/இ1, நாள். 29.12.2017ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்குரிய பணி உத்திரவு 31.12.2018ம் தேதியுடன் முடிவடைவதால் 01/2019 மாதம் முதல் தொடர்ந்து தெரு விளக்கு பராமரிப்பு பணி (Out Sourcing) செய்ய 2017-2018-ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே ஒரு ஒப்பந்த பணியாளரை வழுங்குவதற்கு சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி—2 நிறுவனத்தின் மூலம் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிர்வாக காரணங்களால் மேற்காணும் பணிக்கு 2018—2019ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி—2 நிறுவனம் நல்லமுறையில் மேற்காணும் பணியினை நல்லமுறையில் செய்து கொண்டிருப்பதால் அடுத்த ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு முடிவு செய்யும் வரை 01/2018 மாதம் முதல் தெருவிளக்கு பராமரிப்பு பணி (Out Sourcing) செய்ய ஒரு ஒப்பந்த பணியாளர் மட்டும் 2017—2018ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே ஒப்பந்த ஊதியம் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி—2 நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு வழங்கிடும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.1,50,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1300—1/2017/இ1)**

**அலுவலக குறிப்பு :-**

1. தெருவிளக்கு பராமரிப்பு பணி (Out Sourcing) செய்ய 2017-2018-ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே ஒரு ஒப்பந்த பணியாளரை வழங்குவதற்கு சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி—2 நிறுவனம்

சம்மதம் தெரிவித்ததின்படி 01/2019ம் மாதம் முதல் தொடர்ந்து பணிகள் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.1,50,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. தெருவிளக்கு பராமரிப்பு பணி (Out sourcing) செய்ய 2019—2020—ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு ஒப்பந்த புள்ளிகள் முடிவு செய்யும் வரை 2017-2018-ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே ஒரு ஒப்பந்த பணியாளர் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி—2 மூலம் தொடர்ந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.477** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் இடங்களில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சிவகஙகை அவர்களின் வரன்முறைப்படுத்தப்பட்டு (1) ஜாமியா நகர் (2) தாய் கார்டன் (3) வைரஸ்ம் கார்டன் (4) ரூபி சார்டன் ஆகிய நான்கு இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் பூங்கா அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பூங்கா இடத்தில் அப்பகுதி பொதுமக்கள் பயன்படுத்தும் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பொருட்டு Onsite Compost yard அமைக்குமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்கு பூங்கா அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நான்கு இடங்களில், ஏற்கனவே இரண்டு இடங்களில் Onsite Compost yard அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதனை தொடர்ந்து தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூபி பூங்காவில் Onsite Compost yard அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.22,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக பணி மேற்பார்வையாளரால் கோரப்பட்டுள்ளது. நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.இ1/1157/2018 )**

**அலுவலகக் குறிப்பு:**

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. உத்தேச செலவினம் ரூ.22,000/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.478** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

கீழக்கரை நகராட்சி — பொதுசுகாதார நலன் — டெங்கு மற்றும் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் கொசுப்புழுக்கள் கண்டறிந்து அழிக்கும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தற்காலிக மஸ்தூர்களை கொண்டு இந்நகராட்சி பகுதிகளில்

உள்ள வீடுகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அழித்தல் மருந்து தெளித்தல் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற பணிகளை நாள் ஒன்றிற்கு 40 மஸ்தூர்களை வீதம் பணியாளர்களை வைத்து பணிகள் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ந.க.எண் க்யூ3/54942/2015 நாள் 12.09.2016 மூலம் உத்திரவிடப்பட்டது அதன் அடிப்படையில் இந்நகர் மன்ற தீர்மான எண் 292 நாள் 29.12.2017–ன் படி அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை (பதிவு எண் 1310) அவர்களுக்கு பணி உத்திரவு வழுங்கப்பட்டு 01.01.2018 முதல் 31.12.2018 வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகர் பகுதியில் தீவிர கொசுப்புழு அழிக்கும் பணிக்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.01.2019 முதல் 31.12.2019 வரை பணிநீடிப்பு செய்ய இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஓராண்டு காலத்திற்கு பணிநீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 50,00,000/–க்கு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் தொற்று நோய் தடுப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் Q3/54942/2015 நாள்.12.09.2016–ன்படி அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை,மதுரை (பதிவு எண்.1310) நிறுவனம் மூலம் 40 மஸ்தூர் (DBC) பணியாளர்களை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், உத்திரவில் கண்டுள்ள தினக்கூலி விலைவிகிதம் ரூ 345/– வீதம் ஓராண்டுக்கு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அழித்தல் மருந்து தெளித்தல் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற பணிகளை செய்வதற்கு இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.457/எச்1/2014 நாள்.29.12.2017–ன்படி அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை ( பதிவு எண் 1310) நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட உத்திரவின்படி ஓராண்டிற்கு பணி நீடிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.479**</u> அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 11</u>

இந்நகராட்சி பொதுசுகாதார கழிவுநீர் உறிஞ்சு வாகனம் **TN65Q 9563** வாகனத்தில் PPO மோட்டார் மற்றும் பேரிங பவுஸ்கியர், கம்ப்ரஸர் மோட்டார், பெல்ட் மற்றும் பிளேடு, கியர்பாக்ஸ், கிளட்ச் சாப்ட், கியர்ராடு மற்றும் தொடர்புடைய இதர பழுதுகளை சரிசெய்யும் பணிகள் செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.50,000/– ஆகும். பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று பணி செய்யவும் தொகை வழஙகவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ரூ.50,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.480**</u> அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட கமுதி பால்கடை, வி.ஏ.ஓ. சாவடி, புதிய பேருந்து நிலையம், கடற்கரை சாலை ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் தெரு விளக்குகளின்றி இருளாக உள்ளதால், சட்ட ஒழுங்கு பிரச்சனை, திருட்டு, அந்நிய நபர்களின் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது. ஆகவே மேற்கொண்ட இடங்களில் பொது நலன் கருதி காவல்துறைக்கு உதவும் வகையில் தெரு விளக்குகள் அமைத்திடவும் மற்றும் குற்ற சம்பவங்கள் பற்றி அறியவும் C.C.T.V. கேமராவும் பொருத்துமாறு கீழக்கரை வட்டம் காவல் ஆய்வாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1143/இ1/2019)

**அலுவலக குறிப்பு**

கீழக்கரை வட்டம் காவல் ஆய்வாளரின் கடிதத்தின்படி C.C.T.V. கேமரா பொருத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.481** அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் / ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**